
# முதல்வர் கலைஞரின் உழவர் சந்தை



# கலைஞர் ஆட்சியின் உழவர் சந்தை திட்டம்



# உழவர் சந்தை

வேளாண்மை மண்ணுக்கு மருதாணி பூசும் உன்னதப் பணி –

ஒவ்வொரு பயிருக்கும் பச்சை குத்தி

அது மணிகளால் தலைகவிழ்ந்து நிற்கும்

அற்புத உத்தி உழவால் நடக்கிறது –

பூமி மட்டுமே கீறுகிறவனுக்கு வெகுமதி தருகிறது –

தோண்டுகிறவனுக்குத் தண்ணீரைத் தருகிறது –

*'உழுபவன் கணக்குப் பார்த்தால்*
*உழவு கூட மிஞ்சாது'*

என்கிற நிலை ஏற்படுவது இடைத்தரகர்களால்,

***உழுபவனுக்கும் உயர்வு இல்லை***
***உண்பவனுக்கும் மகிழ்வு இல்லை***

– காரணம் பூப்பந்து போன்ற பனிப்பாறை உருண்டு உருண்டு திரண்டு கால்பந்து போலாகி விடுவதைப் போல் – கைமாறி கைமாறி விலை உயர்ந்து நுகர்வோர் கழுத்திலும் நுகத்தடியாக மாறுகிறது. இதை மாற்றும் 'ரசவாத'மாகத்தான் உழவர் சந்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மதுரை மாநகரில் தமிழகத்தின் முதல் 'உழவர் சந்தை' 14–11–1999 அன்று தொடங்கப்பட்ட போது முதலமைச்சர் ஆற்றிய உரை இங்கே கையேடாக உங்கள் கைகளில் தவழ்கிறது.

பகர்வோர் – நுகர்வோருக்கான நேருக்கு நேர் இதன் மூலம் சாத்தியமாகியிருக்கிறது.

காய் கனிகளுக்கான இந்த சந்தை வேளாண் பெருமக்களைக் காய்கறிகளையும், கனிகளையும் அதிகமாகப் பயிரிட ஊக்கப்படுத்தும் –

நாம் ஊட்டச்சத்தில் தன்னிறைவு (Nutrient Adequacy) என்கிற நிலையை அடைய உழவர் சந்தை முதல்படி...முக்கியபடி...ஊக்கப்படி...

**நா. ஆதிமூலம், இ.ஆ.ப.,**
செயலர்,
வேளாண்மைத்துறை.


அரசுப் பேருந்துகளில் காய்கறிகளை அடையாள அட்டை பெற்ற விவசாயிகள் இலவசமாக ஏற்றிச் செல்லலாம். உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரக்கூடிய அருமையான திட்டம்தான் உழவர் சந்தை திட்டம் என்று மதுரையில் உழவர் சந்தை திட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

மதுரையில் உழவர் சந்தையை தொடங்கி வைத்து முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

மதுரை மாநகரில் தமிழக அரசின் திட்டங்கள் மிக முக்கியமான திட்டங்கள் தொடங்கப்படுவது வாடிக்கை. நேற்றும் இன்றும் நான் கலந்துகொண்ட விழாக்களில் பேசியவர்கள் மதுரை நகரத்தில் எந்தெந்த நிகழ்ச்சிகள் முதன்முதலாக தொடங்கப் பட்டன, எந்த திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பதையெல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

தந்தை பெரியார் நினைவைப் போற்றுகின்ற சமத்துவபுரம் திட்டம் மதுரையிலேதான், இந்த மாவட்டத்தில்தான் மதுரைக்கு அருகில் மேலக்கோட்டையில் தொடங்கப்பட்டது. இன்றைக்கு மாநிலம்






முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சமத்துவபுரங்கள் உருவாகியிருக்கின்றன. அதைப்போல இன்றைக்கு மிகப் புதிய திட்டமான பரவலாக வளரவேண்டிய விரிவாக ஆக வேண்டிய திட்டமான இந்த உழவர் சந்தைத் திட்டமும் மதுரையம்பதியிலே இன்றைய தினம் தொடங்கப்பட்டிருக்கின்றது.

### மதுரைக்குப் பெருமை சேர்க்கும் மற்றொரு திட்டம்

மதுரைக்கு பல பெருமைகள் உண்டு. அதைப்போல தமிழக அரசு தொடங்குகின்ற திட்டங்கள் எல்லாம் இங்கேதான் தொடங்கப்படுகின்றன என்கின்ற பெருமையும் மதுரைக்கு சேருகிறது என்பதைவிட மதுரையின் மூலம் தமிழக அரசுக்கு அந்தப் பெருமை சேருகிறது என்பதை நான் இங்கு எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை' என்று மதுரையின் சிறப்பை இலக்கியம் எடுத்துக் கூறும். அத்தகைய உழவர் பெருந்தகைகளின் உழைப்பை பெருமையை எடுத்துக் காட்டுகின்ற இந்த மண்டலத்தில் இந்த


அரசின் சார்பில் இன்றைக்கு தொடங்கப்பட்டுள்ள உழவர் சந்தைக்கு கருத்துக்குறிப்பு இன்று நேற்றல்ல, ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன்பு; 17.3.99 அன்று **1999–2000** ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையிலே வைத்து நான் உரையாற்றிய போதே குறிப்பிட்டிருக் கின்றேன்.




கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அறுவடை செய்தவுடன் உரிய விலையைப் பெறுவதற்கும் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துள்ள சர்க்கரை ஆலைகள் வழிவகை செய்வது போன்ற சட்டபூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், திட்டமொன்று வரும் நிதியாண்டிலிருந்து தொடங்கப்படும் என்று அறிவித்திருந்தேன்.

### நூறு உழவர் சந்தைகள் மாநிலம் முழுதும் அமைக்கப்படும்

அந்த அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில்தான் 'காய்கறிகள், பழங்கள் முதலான வேளாண் விளைபொருட்களை இடைத்தரகர்கள், வணிகர்கள் குறுக்கீடு




ஏதுமில்லாமல் உழவர்கள் நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்யும் வழிவகை செய்கின்ற அளவிற்கு மாநிலத்தில் நகர்ப்புறங்களில் 100 இடங்களில் ‘உழவர் சந்தைகள் நிறுவப்படும்’ என்று 25.10.99 அன்று அறிவிக்கப்பட்டு இன்றைய தினம் மதுரை நகரில் இந்த அருமையான திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது.

இதனை இவ்வளவு விரைவில் இங்கே தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தங்கவேலு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரிய முயற்சிகள் ஆகும். எனவே நான் உழவர் பெருமக்களின் சார்பாக அவருக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்வளவு விரைவில் இந்த இடத்தை அமைத்து இந்த இடத்தை முதலில் தேர்வு செய்து இந்த இடத்தில் உழவர்கள் தங்களுடைய பொருட்களை கொண்டுவந்து விற்பனை செய்வதற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும். இதிலும் சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நானும், வேளாண்துறை அமைச்சரும், பேரவைத் தலைவர் பி.டி.ஆர். அவர்களும், மாவட்ட

ஆட்சித்தலைவரிடத்திலே இங்கே வந்தவுடனேயே சொல்லியிருக்கிறோம். மேடையில் கூட அதைப்பற்றி சொல்லி யிருக்கிறோம்.

இதனுடைய உயரம் கிட்டத்தட்ட பத்து அல்லது பத்தரையடி உயரத்திலே இவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வளவு உயரம் தேவையில்லை. உங்களுடைய வியாபாரம் உயர வேண்டும். அந்த உயரம்தான் தேவையே தவிர இந்த உயரம் தேவையில்லை. எட்டடி உயரத்திற்கு இந்த அஸ்பெஸ்டாஸ் கொட்டகைகள் அமைந்தால் போதுமானது என்கின்ற கருத்தை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு எடுத்துக் கூறப் பட்டிருக்கிறது. அதுபோலவே மழை நேரங்களில் வியாபாரிகளுக்கு தொல்லை ஏற்படாமல் காய்கறிகள் அல்லது பொருட்கள் இவைகளுக்கு சேதம் எதுவும் ஏற்படாமல் இருக்க தார்ப்பாய் என்கின்ற அந்த மறைவுத் திரையை கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கை வெகு விரைவில் எடுக்கப்படும் என்பதையும் நான் உழவர் பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாநகரில் ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். நாள்தோறும்






ஒருவருக்கு 350 கிராம் வீதம் 350 மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவை மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், அதைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் கூட இங்கு வருகின்றன.

**விவசாயிகளிடம் பணம் பெற பயன்படுத்திய வழிகள்**

இவற்றை மொத்த வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்குவதோடு கமிஷன், மகமை என்ற பெயர்களிலும், விவசாயிகளிடமிருந்து பணம் பெற்றுக் கொள்கின்றனர்.

விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கப்பட்ட காய்கறிகளை கூடுதலாக இலாபம் வைத்து சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றார்கள்.

சில்லறை வியாபாரிகளோ மேலும் இலாபம் வைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றார்கள். இதனால் என்ன விளைவு என்றால் விவசாயிகளுக்கு மிகக்குறைந்த விலைதான் கிடைக்கிறது. உற்பத்தி செய்தவர்களுக்கு குறைந்த விலை கிடைக்கின்றது. பொதுமக்களோ அதிக

விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதற்கு மாற்று ஏற்பாடாகத்தான் இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள திட்டம் உழவர் சந்தைத் திட்டம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்டுள்ள இந்த உழவர் சந்தை மதுரையில் அதுவும் மேலும் ஒரு சிறப்பு அண்ணா நகரில் 1.5 ஏக்கர் பரப்பளவில் இந்த சந்தை அமைந்துள்ளது. மொத்தம் இங்கே 80 கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த விபரங்களை யெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் அமைய இருக்கின்ற இந்த சந்தைகள் இவற்றை பின்பற்றுவதற்கு ஏதுவாக இருக்கும்.

எண்பது கடைகள் வைக்கின்ற அளவிற்கு இல்லாவிட்டாலும் கடைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் இடத்தின் அளவு குறைவாக இருந்தாலும் முறைகளோ வேறு பல தன்மைகளும் இவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றை விவரமாக நான் குறிப்பிடுகின்றேன்.

இந்த சந்தையில் மின்விளக்கு, குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை






வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இங்கு முதற்கட்டமாக மதுரையைச் சுற்றிலும் விளையும் கத்தரிக்காய், வெண்டை, அவரை, பீர்க்கங்காய், சுரைக்காய், புடலை, பாகற்காய், முருங்கைக்காய், தக்காளி, வாழைக்காய், வாழை இலை, மல்லி, கருவேப்பிலை, இஞ்சி, தேங்காய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் மற்றும் கீரை வகைகள் முதல் இங்கே விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகைக் காய்கறிகள், மதுரையை சுற்றி உள்ள செக்கானூரணி, உசிலம்பட்டி, சின்ன உடைப்பு, வலையங்குளம், மேலூர் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில்தான் அதிகம் உற்பத்தியாகின்றது. இப்பகுதிகளில் இவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்யும் விவசாயிகள் இந்த உழவர் சந்தைக்கு நேரடியாகத் தங்கள் காய்கறிகளையெல்லாம் கொண்டு வரலாம்.

இந்த விவசாயிகளுக்கு முக்கியமாக புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டைகள் அரசு வழங்கி இருக்கிறது. அவர்கள் அந்த அடையாள அட்டையைக் காட்டி அரசு பஸ்ஸில் காய்கறி மூட்டைகளை ஏற்றி உழவர் சந்தைக்குக் கொண்டுவரலாம். அப்படி கொண்டுவரும் காய்கறி

மூட்டைகளுக்கு பஸ்ஸில் சுமை கட்டணம் (லக்கேஜ்) வசூலிக்கப்படமாட்டாது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றை இலவசமாகவே கொண்டு வரலாம். பேருந்துகளிலோ, வண்டியிலோ உழவர் சந்தைக்கு கொண்டுவரப்படும் காய்கறி மூட்டைகளை நாங்கள்தான் இறக்குவோம் என்று கட்டாயப்படுத்த சுமைப் பணியாளர்கள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். விவசாயிகளே அவற்றை இறக்கிக் கொள்ளலாம்.




## விலையை நிர்ணயிக்க விவசாயிகள் அடங்கிய குழு

சந்தையில் விவசாயிகள் நேரடியாக தங்கள் காய்கறிகளை விற்பனை செய்யலாம். காய்கறிகளின் விலை அன்றாடம் நிர்ணயம் செய்யக்கூடியது என்பதால், விலையை நிர்ணயிக்க விவசாயிகள் அடங்கிய குழு ஒன்று இந்த உழவர் சந்தையிலேயே இருக்கும். அந்தக் குழு நிர்ணயித்த விலைக்கு அனைவரும் காய்கறிகளை விற்பனை செய்யமுடியும். காய்கறிகளுக்குரிய விலை விவரத்தைக் கடைமுன்னால் தொங்கவிட வேண்டும். இந்த உழவர் சந்தையை பராமரிக்க மதுரை வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழு அலுவலகம் இங்கேயே அமைக்கப் பட்டு உள்ளது.




இந்த அலுவலகம் காய்கறிகளை எடைபோடுவதற்கு தேவையான தராசு, படிக்கல் ஆகியவைகளை வழங்கும். வேறு தராசு, வேறு படிக்கல் பயன்படுத்தக்கூடாது. அலுவலகம் வழங்கும் தராசு படிக்கல்லை பயன்படுத்தித்தான் விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உழவர் சந்தையில் விவசாயிகளிடம் பொதுமக்கள் புத்தம் புது காய்கறிகளை வாங்க இந்த சந்தை பயன்படும். அரசாங்கமே எடை படிக்கல் கொடுப்பதால் எடை சரியாக இருக்கும். யாருக்கும் சந்தேகம் எழத் தேவையில்லை. இங்கு இந்தச் சந்தையில் விவசாயிகளுக்கு வாடகையும் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளுக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் தாங்களே விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்வதாலும், பஸ்சில் லக்கேஜ் இல்லாமல் இலவசமாக கொண்டு வருவதாலும் அவர்களுக்கு லாபகரமான விலை கிடைக்கும் என்பதையும் நாம் உணர முடிகிறது.

எனவே விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் மிகப்பெரிய அளவில்

இத்திட்டம் பயன்தரும். வேளாண்மைத் துறை அமைச்சர் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டதைப் போல உழவருக்கும் நுகர்வோருக்கும் ஒரு நல்ல ஒற்றுமையான நிலையையும் அதே நேரத்தில் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரக்கூடிய இந்த அருமையான திட்டத்தை இன்றைக்கு நான் ஆரம்பித்து வைத்திருக்கின்றேன். இந்தத் திட்டம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் இத்திட்டம் வரையறுக்கப்பட்டு, இப்போது நிறைவேறத் தொடங்கியிருக்கிறது. தொடர்ந்து பல நகரங்களில் பல பகுதிகளில் இந்த சந்தைகள் தொடங்கிட உரிய முயற்சிகளை அரசும், அரசு சார்புடைய வேளாண்மைத் துறையும் எடுக்கும் என்ற நம்பிக்கையை உங்களுக்குத் தெரிவித்து உங்கள் வியாபாரம் செழிக்கவும் அதன் மூலமாக உழவர் பெருமக்களும் பொது மக்களும் பயன் அடையவும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



## உழவர் சந்தை திட்டத்தின் சிறப்புகள்

- ★ அழுகும் பொருட்களான பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை விவசாயிகள் இடைத்தரகர்கள்/வியாபாரிகள் குறுக்கீடு ஏதுமில்லாமல், நேரடியாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பது.

- ★ நுகர்வோர், விவசாயிகளிடமிருந்து காய்கறிகள் பழங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் நேரடியாக வாங்குவது.

- ★ இடைத்தரகர்கள்/வியாபாரிகள் குறுக்கீட்டிற்கு இடமில்லாது பழங்கள், காய்கறிகளின் விலையைச் சீராக வைத்திருப்பது.

- ★ மானிய விலையில் விதைகள், இடுபொருட்கள் ஆகியவற்றைக் குறித்து வேளாண்மை/தோட்டக்கலைத் துறை விரிவாக்கப் பணிகளை ஒருமுகப்படுத்துவது.

- ★ காய்கறிகள், பழங்கள் விற்பனை குறித்த தகவல் தொடர்பு மையங்களாக செயல்படுவது.

- ★ அழுகும் பொருட்கள் வீணாவதைக் குறைக்கும் பொருட்டு கையாளும் முறை, சிப்பங்கட்டும் முறை ஆகியவை குறித்த புதிய தொழில்நுட்ப முறைகள் பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை மற்றும் பயிற்சி அளிப்பது.

- ★ இந்த சந்தைகள் 40 கி.மீ. சுற்று வட்டாரத்தில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் காய்கறிகள்/பழங்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள 10–15 கிராமங்களுக்கு, ஒன்று என்ற அளவில் அருகிலுள்ள நகர்ப்புறத்தில் காய்கறிகள்/பழங்கள் குறிப்பிடத்தக்க அளவில் தேவையுள்ள மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில், 50 சென்ட்டுக்குக் குறையாத நிலப்பரப்பில் நுகர்வோருக்கு வசதியான இடங்களில் அமைக்கப்படும்.

★ இச்சந்தைகளில் ஒரு கடை 5 அடி அகலம், 8 அடி நீளம் என்ற அளவில், சுமார் 50 அல்லது 60 கடைகள் அமைக்கப்படும். தேவைப்படின் கூடுதலாக கடைகள் கட்டப்படும்.

★ விவசாயிகள் பயன்பாட்டிற்காக தராசுகள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகள், தொலைபேசி/தொலையச்சு (FAX), வாகன நிறுத்துமிடங்கள், மிஞ்சிய பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்பு அறைகள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக இச்சந்தைகள் இருக்கும்.

★ தமிழகம் முழுவதும் 100 உழவர் சந்தைகள் ரூ.7 கோடி மதிப்பீட்டில் உருவாக்கம்.

## திட்டச் செயலாக்கம்

★ இச்சந்தைகள் வேளாண் விற்பனைக் குழுவைச் சார்ந்த அலுவலர்களால் பராமரிக்கப்படும்.

★ விவசாயிகள் சந்தைகளுக்குக் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக, தேவைக்கேற்ப பொருள் தாங்கிகள் (Luggage Carrier) பொருத்திய சிறப்பு பேருந்துகள் இவ்வழித் தடங்களில் இயக்கப்படும். சரக்குகளுக்குக் கட்டணமின்றி பயணிகளுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கப்படும்.

★ விற்பனை செய்வதற்குக் கொண்டு வரப்பட்டுள்ள காய்கறிகளின் அளவின் அடிப்படையிலும், முதலில் வருவோருக்கு முதலில் என்ற அடிப்படையிலும் விற்பனைக் குழு அதிகாரிகளால் விவசாயிகளுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்து தரப்படும். எந்த ஒரு விவசாயியும் எந்த ஒரு இடத்திலும் சொந்தம் கொண்டாட இயலாது.

★ தோட்டக்கலைத்துறையைச் சார்ந்த விரிவாக்கப் பணி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

★ இந்த அட்டைகளைக் கொண்டுவரும் விவசாயிகள்/அவரது குடும்பத்தினருக்கு மட்டுமே கடைகள் ஒதுக்கீடு செய்து தரப்படும்.

★ இச்சந்தைகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

★ நிர்வாக இடர்பாடுகளைக் களைவதற்காக ஒவ்வொரு சந்தையிலும் 'விவசாயிகள் குழு' அமைக்கப்படும்.

★ சந்தை நிலவரத்தைப் பொறுத்து விளைபொருட்களுக்கு விவசாயிகளே விலையை நிர்ணயம் செய்வார்கள்.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் 'உழவர் சந்தை' வெற்றிகரமாக நடைபெற மாவட்ட ஆட்சியர் பொறுப்பாவார்.

★ மாநில அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது வேளாண்மை விற்பனை ஆணையரின் பொறுப்பாகும். அவர் மாதமிருமுறை பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைப்பார்.

★ சந்தைகள் அமைப்பதற்காக, நிலங்கள் அரசு நிலமாக இருந்தால் இலவசமாகவும், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமானவை என்றால் மிகக் குறைந்த குத்தகைத் தொகைக்கும் (Nominal Lease Amount) சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுக்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும்.

தமிழரசு அச்சகம், சென்னை—2.


இதுவரை
கத்தரிக்கா, மிளகாய் வெண்டக்கா, 4 ரூவா. மத்ததெல்லாம் 3 ரூவா.
ஐயா, கொஞ்சம் ாத்துக்குடுங்க சாமி!
இத பார் துட்ட எண்ணி வாங்கிக்கிட்டு நடையகட்டு.
மெய்யப்பன் காய்கறி அங்காடி
உழைப்பே உயர்வு தரும்
கத்தரிக்கா எப்படிங்க?
எல்லாம் மலிவுதாம்மா பதினாறு ரூவா. பதினைஞ்சு ரூவா.
இனி
நிதானமா பறிச்சுக்கோ யாருக்காகவும் ஓட வேண்டியதில்லை இப்பதான் உழவர் சந்தை வந்தாச்சே!
இப்பதாம்மா நமக்கு விடிஞ்சிருக்கு! இனிமே எப்பவும் மலிவுதாம்மா. உங்களுக்கும் லாபம்! எங்களுக்கும் லாபம்!
என்னங்க எல்லாமே ரொம்ப மலிவா இருக்கே!! நம்ப முடியலியே!